# திறன் அறிவோம் வினா விடை



## பலவுள் தெரிக

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்... **(இ – அகப்பொருள் இலக்கணம்)** [MAR - 24]
   - அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   - ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   - **இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**
   - ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள் **[PTA - 3]**

2. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர். **(உ – பன்முகக் கலைஞர்)**
   கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
   - அ) கூற்று 1 சரி 2 தவறு
   - ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
   - இ) கூற்று 1 தவறு 2 சரி
   - ***ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி***

3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது? **(செ – பூத்தொடுத்தல்) [PTA – 1]**
   - அ) அள்ளி முகர்ந்தால்
   - ***ஆ) தளரப் பிணைத்தால்***
   - இ) இறுக்கி முடிச்சிட்டால்
   - ஈ) காம்பு முறிந்தால்

4. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது? **(உ – பன்முகக் கலைஞர்)**
   - அ) தூக்குமேடை என்னும் நாடகத்தில் நடித்தவர் யார்?
   - ***ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?***
   - இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?
   - ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? **(செ–கம்பராமாயணம்) [APR-23, PTA-4, SEP -21, AUG-22]**
   - அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
   - ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   - இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
   - ***ஈ) அங்கு வறுமை இல்லாததால்***

### தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் மற்றும் QR CODE வினாக்கள் :

Online Test

6. முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள்______. **(இ – அகப்பொருள் இலக்கணம்)**
   - அ) வெண்நெல், வரகு
   - ஆ) மலைநெல், தினை
   - ***இ) வரகு, சாமை***
   - ஈ) மீன், செந்நெல் **[QR][PTA - 6]**

7. **பொருத்துக. (செ-முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்)[QR]**

| | | |
|---|---|---|
| 1) சுட்டி | - | i) காதில் அணிவது |
| 2) குழை /குண்டலம் | - | ii) காலில் அணிவது |
| 3) பண்டி | - | iii) நெற்றியில் அணிவது |
| 4) கிண்கிணி / சிலம்பு | - | iv) வயிறு |

தெரிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-i | 3- iiii | 4-ii |
| ஆ) | 1-i | 2-ii | 3-iv | 4-iii |
| இ) | 1-iv | 2-iii | 3-ii | 4- i |
| **ஈ)** | **1-iii** | **2-i** | **3-iv** | **4-ii** |

8. **பொருத்துக. (செ–கம்பராமாயணம்) [QR]**

| | | |
|---|---|---|
| 1) வில் பிடித்த | - | i) நான்காம் வேற்றுமைத் தொகை |
| 2) நெடும்படை | - | ii) வினைத்தொகை |
| 3) காலதூதன் | - | iii) பண்புத்தொகை |
| 4) விரிசோதி | - | iv) இரண்டாம் வேற்றுமைத்தொகை |

தெரிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ***அ)*** | **1-iv** | **2-iii** | **3- i** | **4-ii** |
| ஆ) | 1-ii | 2-iv | 3-iii | 4-i |
| இ) | 1-iii | 2-i | 3-ii | 4- iv |
| ஈ) | 1-iv | 2-iii | 3-ii | 4-i |

9. கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர் ____. **(பொது)[MDL-19]**
   - அ) வினாத் தொடர்
   - ஆ) தனித் தொடர்
   - இ) செய்தித் தொடர்
   - ***ஈ) கலவைத் தொடர்***

10. ஞாயிறு மறையும் நேரம் என்பது ______. **(இ – அகப்பொருள் இலக்கணம்) [QR]**
   - அ) யாமம்
   - ஆ) வைகறை
   - இ) மாலை
   - ***ஈ) எற்பாடு***

Waytosuccess

11. பொருத்துக. **(இ – அகப்பொருள் இலக்கணம்) [PTA - 4] [QR]**

1) குறிஞ்சி - i) உப்புவிளைத்தல்
2) முல்லை - ii) நெல்லரிதல்
3) மருதம் - iii) நிரை மேய்த்தல்
4) நெய்தல் - iv) தேனெடுத்தல்

| தெரிவுகள் | | | |
|---|---|---|---|
| **அ) 1-iv** | **2-iii** | **3- ii** | **4-i** |
| ஆ) 1-iii | 2-ii | 3-iv | 4-i |
| இ) 1-i | 2-iv | 3-ii | 4- iii |
| ஈ) 1-ii | 2-i | 3-iii | 4-iv |

12. எர்லி மார்னிங் எழுந்து வாக்கிங் சென்று வந்து டீ குடித்த அம்மா நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்.
- இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொல் வரிசையை அறிக. **(பொது) [QR]**

அ) வைகறை, நடைபயிற்சி, பத்திரிக்கை, தேநீர் ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிக்கை
இ) காலை, நடை, தேநீர், செய்தி ***ஈ) வைகறை, நடைபயிற்சி, தேநீர், செய்தித்தாள்***

## குறுவினா

**1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக. (இ–அகப்பொருள் இலக்கணம்) [PTA - 2]**

| முதற்பொருள் | | கருப்பொருள் |
|---|---|---|
| நிலம் | பொழுது | |
| ❋ காடு | ❋ **பெரும்பொழுது** - கார்காலம் (மழைக்காலம்)<br>❋ **சிறுபொழுது** - மாலை | ❋ உணவு - வரகு |

**2. ‘‘கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்’’ – பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக. (பொது)**

கலைஞர் பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளராகவும் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளராகவும் இருக்கிறார் என்று பேராசிரியர் அன்பழகனார் கூறுகிறார்.

**3. *உறங்குகின்ற கும்பகன்ன ‘எழுந்திராய் எழுந்திராய்’* (செ–கம்பராமாயணம்) [SEP – 2020, PTA - 6]**
***காலதூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’***
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

❋ “உறங்குகின்ற கும்பகருணனே! உன்னுடைய பொய்யான வாழ்வெல்லாம் முடியப் போகிறது. அதனைக் காண்பதற்கு உறக்கத்தை விட்டு எழுந்திடுவாய்!” என்று சொல்லி எழுப்புகிறார்கள்.
❋ “காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் படுத்து உறங்குவாய்...” என அவன் உறங்க வேண்டிய இடத்தை சொல்கின்றனர்.

**4. *சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்* (செ–பூத்தொடுத்தல்)**
***சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்* - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக. [PTA - 5]**

❋ பெண்களே இவ்வுலகத்தைத் தாங்கும் போராளிகள் என்பதை இவ்வடிகள் அழகாக எடுத்துரைக்கின்றன.
❋ பூக்களின் தண்டுகள் போல, அமைதியான இந்தப் பெரிய உலகத்தை, குடும்பச்சுமைகளை பெண்கள் சுமக்கின்றனர்.
❋ அழகான பூக்களை ஒல்லியான காம்புகள் தாங்குகின்றன. அதனைப்போல பெரிய குடும்பச்சுமைகளை பெண்ணெனும் ஒல்லித்தண்டு தாங்கிக்கொள்கிறது.

**5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக. (இ–அகப்பொருள் இலக்கணம்)**

**(அ)** உழவர்கள் மலையில் உழுதனர்.
**விடை :** குறவர்கள் மலையில் கிழங்கு அகழ்ந்தனர் (அல்லது) தேனெடுத்தனர். *(மலை -முதற்பொருள்)*

**(ஆ)** முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
**விடை :** தாழைப் பூச்செடியை (அல்லது) நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர். *(கடல் - முதற்பொருள்)*

## சிறுவினா

**1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக. (செ - முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்) [PTA – 1, MDL -19]**

**அ) திருவடியில் சிலம்பும் கிண்கிணியும் :**

முருகன் தன் திருவடிகளிலே அணிந்த சிறு செம்பொன்னாலாகிய கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

**ஆ) இடையில் அரைஞாண் மணி :**

- இடையில் அணிந்திருந்த அரைஞாண் கயிற்றோடு, ஒளி வீசுகின்ற அரைவடங்கள் ஆடியது.
- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.

**இ) நெற்றியில் சுட்டி :**

பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான நெற்றிச்சுட்டி பதிந்து ஆடியது.

**ஈ) காதில் குண்டலங்களும் குழைகளும் :**

காதில் அணிந்துள்ள கம்பிகளால் உருவான குண்டலங்களும் குழைகளும் அசைந்து ஆடின.

**உ) தலையில் சூழி :**

- தலையில் அணிந்துள்ள சூழியும், உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளிமிக்க முத்துகளோடு அசைந்து ஆடின.
- அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

இவ்வாறு வைத்தியநாதபுரியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் அழகிய அணிகலன்களுடன் செங்கீரை ஆடியதைக் குமரகுருபரர் நயம்பட எடுத்துரைக்கிறார்.

**2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. (செ–பூத்தொடுத்தல்) [PTA - 5]**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>**- நவீன கவிதை** | கையாலே பூவெடுத்தா - மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா - மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு - மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>**- நாட்டுப்புறப் பாடல்** |

**விடை**

| நவீன கவிதை | நாட்டுப்புறப் பாடல் |
|---|---|
| ❖ பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு முறியும்.<br>❖ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.<br>❖ எப்படி கட்டினாலும் மரணம் என்பது உறுதி என்று அறிந்திருந்தும் வருந்தாமல் பூக்கள் சிரிக்கும்.<br>❖ இத்தகைய பூக்களை பெண்களோடு ஒப்பிடுகிறார்.<br>❖ இத்தகைய மென்மை உள்ளம் கொண்ட பூவை எப்படி தொடுப்பது என்று நவீன கவிதை கூறுகிறது. | ❖ பூக்களைக் கையால் எடுத்தால் கையின் வெப்பத்தால் காம்பு அழுகிப் போகும்.<br>❖ விரலால் தொடுத்தால் பூக்கள் வெம்பி விடும்.<br>❖ எனவே, தங்கத்துரட்டியால் வலிக்காமல் பூக்களை பறித்து மலர்களாகவே படைத்திடுவோம்.<br>❖ இத்தகைய மென்மை உள்ளம் கொண்ட பூக்களை எப்படி மாரியம்மனுக்கு மாலையாக தொடுப்பது என்று நாட்டுப்புறப் பாடல் கூறுகிறது. |

ஒப்பீடு : இவ்விரு பாடல்களும் பூக்களின் மென்மை தன்மையை கருபொருளாகக் கொண்டு பாடுகின்றன.



Way to success

**3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன'. - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

**(இ–அகப்பொருள் இலக்கணம்) [PTA – 3]**

**கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் :**

- மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் போன்றவை **நெய்தல்** நிலப்பகுதியில் நடைப்பெற்றது.
- இன்றும் மீனவர்கள் கடலில் மீன்கள் பிடித்து, பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.
- பரந்த பரப்பளவில் உப்பளங்களில் உப்பு காய்ச்சி, சுத்திகரித்து ஏற்றுமதி செய்கின்றனர்.

**மலைப் பகுதிகளில் மலைப் பயிர்கள் :**

- தேனெடுத்தல், தினை விதைத்தல், கிழங்கு அகழ்தல் ஆகியவை **குறிஞ்சி** நில தொழில்கள்.
- இன்றைய சூழ்நிலையில், தேன் ஏற்றுமதி தொழிலில் முக்கிய இடம் வகிப்பதால், தேனீ வளர்ப்பு மக்களால் விரும்பப்படும் முக்கிய சுயதொழிலாக உள்ளது.
- தினை, வரகு போன்ற சிறுதானியங்களை விரும்பி உண்பதால் அவற்றை அதிகம் பயிரிடுகின்றனர்.

**நிலப் பகுதிகளில் உழவுத் தொழில் :**

- நெல் பயிரிடல், களை பறித்தல், அறுவடை செய்தல் போன்ற செயல்கள் **மருத** நிலத்தில் செய்தனர்.
- இன்று அதிக விளைச்சல் தரக்கூடிய புதுமையான கலப்பின நெல் ரகங்கள் பயிரிடப்படுகின்றன.
- இதனை செய்வதற்கு மனித ஆற்றலை விட இயந்திர ஆற்றல் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

**காடுகளில் நிரைமேய்த்தல் :**

- ஏறு தழுவுதல், நிரைமேய்த்தல், மாடுகளை உழவுக்கு பழக்குதல் போன்றவை **முல்லை** நில தொழில்கள்.
- இன்று ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டாக மாற்றம் பெற்று அனைத்து நிலப்பகுதிகளிலும் நடைபெறுகிறது.
- இக்காலத்தில் மக்கள் கால்நடை வளர்ப்பின் மூலம் பால் உற்பத்தி பெருக்கப்பட்டு பல்வேறு பால் உபபொருள்களான தயிர், மோர், பனீர்.. என அதிகம் பொருளீட்டுகின்றனர்.

**பாலை பகுதிகளில் தொழில் :**

- **பாலை** நிலத்தில் ஒட்டகம் மேய்த்தல் நடைபெறும். வழிப்பறிக் கொள்ளைகள் அதிகம் நிகழ்ந்தன.
- அறிவியல் வளர்ச்சியினால் பாலை மக்கள் வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்து பொருளீட்டுகின்றனர்.

**4. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.**

**தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகள்: (உ – பன்முகக் கலைஞர்)**

கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல பணிகளை மேற்கொண்டார். அவற்றுள் சில..

- மனோன்மணீயம் சுந்தரனாரின் 'நீராருங் கடலுடுத்த' என்னும் பாடலை அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப்பாடலாகப் பாடுவதற்கு வழிவகுத்தார்.
- தமிழ் வளர்ச்சித்துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரை அமைச்சராக்கினார்.
- 2010ஆம் ஆண்டு கோவையில், தமிழ்நாடு அரசின் சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தினார்.

## தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் :

**5. கம்பராமாயணம் - நூற்குறிப்பு வரைக. (செ–கம்பராமாயணம்) [MAY – 2022]**

- கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
- இதுவே கம்பராமாயணம் என அழைக்கப்படுகிறது.
- இது ஆறு காண்டங்களை உடையது. அவை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்.
- இப்பாடல்கள் சந்தநயம் மிக்கவை. இது 113 படலங்களையும், 10,500 பாடல்களையும் கொண்டது.



Way to success

**6. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை? [PTA– 3]**

**(இ–அகப்பொருள் இலக்கணம்)**

| முல்லை நில உணவுப் பொருள்கள் | மருத நில உணவுப் பொருள்கள் |
|---|---|
| காட்டில் விளையும் தானியங்களே முல்லை நில உணவுப்பொருள்கள் ஆகும். | வயலில் விளையும் தானியங்களே மருதநில உணவுப் பொருள்கள் ஆகும். |
| வரகு, சாமை, தினை, முதிரை | செந்நெல், வெண்ணெல் |

## நெடுவினா

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக. (உ– நிகழ்கலை) [JUN – 2023]**

**பாராட்டுரை**

அனைவருக்கும் வணக்கம். ஆண்டு விழாவில் சற்று முன் நிகழ்ந்த நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் நம்மை வியப்பின் உச்சிக்கே அழைத்துச் சென்றது என்றால் அது மிகையன்று... ஆம்... இன்று உலகின் அழிவிற்குக் காரணமான நெகிழிப்பையின் தீமைகளை அனைவருக்கும் தத்ரூபமாக விளக்கிய பொம்மலாட்டம் மிகவும் அருமையாக இருந்தது.

பூமியை ஒரு பொம்மையாக அமைத்து, அப்பொம்மை நெகிழிப்பைகளால் சிதைக்கப்படுவதைக் காட்டிய விதம் சிறப்பாக அமைந்தது.

பூமியின் ஆதங்கத்தை, துன்பப்படும் நிலையைத் தன் குரலில் கொண்டு வந்து பார்வையாளர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்த நம் பள்ளி மாணவனின் திறமை அளப்பரியது. அவனுக்கு எம் பள்ளியின் சார்பாக மனம் நிறைந்த பாராட்டுகள்.

மாடு ஒன்று நெகிழிப்பையில் உள்ள உணவை நெகிழிப்பையோடு சேர்த்து தின்றுவிட்டு அவதியுறுவதை மிக அருமையாகப் பதிவு செய்திருந்தனர். அம்மாட்டின் வேதனைக்குரலில் பார்வையாளர்கள் கலங்கிப் போயினர். அப்பகுதி விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

நெகிழிப் பையினால் மனிதர்கள் எதிர்கொள்ளும் நோய்களான மூச்சுக்குழல் பாதிப்பு, சுவாசக் கோளாறு, மலட்டுத்தன்மை ஏற்படுதல், நரம்புத்தளர்ச்சி, சிறுநீரகக் கோளாறு, குடல்புண், செரிமானக் கோளாறுகள் போன்றவற்றைப் பல்வேறு பொம்மைகளைக் கொண்டு உணர்த்தியதற்குப் பாராட்டுக்கள்.

'மாநில அரசு நெகிழிப்பைகளைப் பயன்படுத்தக் கூடாது' என்று தடை உத்தரவு விதித்திருக்கிறது. அதனை மீறிப் பல இடங்களில் நெகிழிப்பைகளை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அம்மக்களின் செயல்களை பொம்மலாட்டத்தின் மூலம் வெளிக்கொணரும் போது அவர்கள் மீது நம்மையறியாமல் கோபம் ஏற்படுவது இந்நிகழ்ச்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகவே கருத வேண்டும்.

நிகழ்ச்சியின் இறுதியில் பொம்மைகள்

ஒழிப்போம்....... ஒழிப்போம்........ நெகிழிப்பைகளை ஒழிப்போம்......
காத்திடுவோம்.... காத்திடுவோம்.... பூமித்தாயைக் காத்திடுவோம்.....
நெகிழிப்பைகளை மறப்போம்........ துணிப்பைகளை எடுப்போம்......
நெகிழிப்பைகளை வீசி.............. உயிர்களை நேசி................. - போன்ற

விழிப்புணர்வு முழக்கங்களை முழக்கமிடும் காட்சிகளில் பார்வையாளர்களையும் சேர்த்து முழக்கமிட வைத்தது அனைவரையும் சிந்திக்கச் செய்தது. பலத்த கைத்தட்டல்களோடு பொம்மலாட்டம் நிறைவு பெற்றது மாணவப் படைப்பாளிகளுக்குக் கிடைத்த விருதாகும்.

பள்ளி ஆண்டு விழா என்றால் ஆடலும் பாடலும் என்றில்லாமல் இதுபோன்ற கலைகள் மூலம் பல நல்ல கருத்துகளை விதைத்துள்ளனர். அம்மாணவர்களுக்கு அனைவரின் சார்பாக எங்களது பாராட்டுகள். அவர்கள் தொடர்ந்து எதிர்காலத்திலும் சமூக அக்கறையோடு விளங்க வேண்டும்! என்று உங்கள் சார்பாக வாழ்த்தி விடைபெறுகிறேன்... நன்றி.

Way to success

**2. போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (உ – பன்முகக் கலைஞர்)**

**முன்னுரை**

இயற்பெயர் மறைந்து இட்டபெயர் நிலைக்கும் அளவுக்கு பெருமை கொண்டவர் கலைஞர் மு.கருணாநிதி ஆவார். அத்தகைய சிறப்பைக் கொண்டவரின் வெவ்வேறான பரிமாணங்களையும் சிறப்புகளையும் இந்தக் கட்டுரையில் காண்போம்.

**போராட்டக் கலைஞர் :**

சிறுவயதில் கலைஞர் திருவாரூரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது பள்ளி முடிந்த மாலைவேளைகளில் தாம் எழுதிய 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!' என்று தொடங்கும் பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டித் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் சென்றார். அப்போது அவருக்கு வயது பதினான்கு மட்டுமே. இதிலிருந்து கலைஞர் போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் என்று தெரிகிறது. இந்தப் போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த கலைத்தன்மையை வளர்த்தது.

**பேச்சுக் கலைஞர் :**

இளமைப்பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளாலும், பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றலாலும் கவரப்பட்டவர் கலைஞர். மேடைப்பேச்சினில் பெருவிருப்பம் கொண்டவர். 'நட்பு' என்னும் தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு பேச்சுப்பயிற்சி அளிப்பதற்காகச் 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கியவர்.

**நாடகக் கலைஞர் :**

தமக்கே உரிய தனிநடையால் தமிழரை மேடை நாடகங்களின் பக்கம் ஈர்த்தவர் கலைஞர். அவர் எழுதிய 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகம், 1944ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை, காகிதப்பூ போன்ற பல நாடகங்களை எழுதியுள்ளார். தான் எழுதிய 'தூக்குமேடை' என்னும் நாடகத்தில் நடிகர் எம்.ஆர்.இராதாவின் வேண்டுகோளுக்காக மாணவர் தலைவராகக் கருணாநிதி நடித்தார். அந்நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான் அவருக்குக் 'கலைஞர்' என்னும் சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது.

**திரைக் கலைஞர் :**

1947ஆம் ஆண்டு தன் 23ஆம் வயதில் திரைப்படங்களுக்கு எழுதத் தொடங்கிய கலைஞர், 2011இல் தொலைக்காட்சிக்காக எழுதிய 'இராமானுஜர்' தொடர்வரையிலும் நிறைவாய் எழுதியவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதன்முதலாக கதாநாயகனாக நடித்த 'ராஜகுமாரி' படத்துக்கான முழுவசனத்தையும் கலைஞர் எழுதினார். அப்படம் மிகப்பெரிய வெற்றி அடைந்தது. அதன்பிறகு எம்.ஜி.ஆரின் நடிப்பில் மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, நாம், மலைக்கள்ளன் முதலான படங்களும், சிவாஜிகணேசனின் நடிப்பில் திரும்பிப்பார், மனோகரா, ராஜாராணி போன்ற படங்களும் கலைஞரின் கதை, வசனத்தில் வெளிவந்தவை. 'பராசக்தி'க்கு கலைஞர் எழுதிய திரைக்கதை, வசனம் தமிழ்த் திரையுலகில் திருப்பு முனையாக அமைந்தது.

திரைக்கதை, வசனம் மட்டுமில்லாமல் திரைப்பட பாடலாசிரியராகவும் புகழ் பெற்றார். 'மறக்க முடியுமா?' என்ற திரைப்படத்தில் கலைஞர் எழுதிய 'காகித ஓடம் கடல் அலை மேலே..' என்னும் பாடல் காலத்தால் மறக்க முடியாத பாடலாகும். பூம்புகார், ராஜாராணி, மனோகரா போன்ற படங்களின் வசனம் அவருடைய எழுத்துக் கூர்மையைக் காலத்திற்கும் எடுத்துச் சொல்லக் கூடியவை.

**இயற்றமிழ் கலைஞர் :**

தமிழ் மீது தீராத பற்றுகொண்ட கலைஞர், இலக்கியத்திலும் பெரும்பங்காற்றினார். நளாயினி, சந்தனக் கிண்ணம் முதலான சிறுகதைகளையும், பொன்னர் சங்கர், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' என்னும் தலைப்பில் ஆறு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார். சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா முதலிய உரை நூல்களையும் எழுதியுள்ளார்.

**முடிவுரை**

தமிழின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க எண்ணிய கலைஞர், அதற்கான பணிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார். அவருடைய தமிழார்வமும், போராட்டக் குணமும், பேச்சுத் திறமையும், கலைத்துறையில் உள்ள ஈடுபாடும் நம்மை வியக்க வைக்கிறது.



Way to success

**3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. (செ–கம்பராமாயணம்)**

**சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்** **[SEP – 2020]**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட.... **இவ்வுரையைத் தொடர்க!**

**அ) மருத நில அழகிய தோற்றம்**

*"தண்டலை மயில்க ளாடத் தாமரை ……..*
*……. மருதம்வீற் றிருக்கு மாதோ"*

என்று மருதநிலத்தின் இயற்கை அழகை மிக அழகாகச் சந்த நயத்தோடு வருணிக்கிறார்.

**விளக்கம்:** சோலைகளிலே மயில்கள் ஆடவும், தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்தி நிற்கவும், மேகங்கள் மத்தளம் போல் ஒலிக்கவும், குவளைக் கொடிகளில் மலர்கள் கண்போல் விழித்துப் பார்க்கவும், நீர் நிலைகளின் அலைகள் திரைச்சீலையைப் போல் காட்டவும், யாழின் இசையைப் போல வண்டுகள் இனிமையாகப் பாடவும் மருதம் வீற்றிருக்கிறது என்கிறார் கம்பர்.

**ஆ) கோசல நாட்டின் பெருமைகள்**

*வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்………*
*……….கேள்வி மேவலால்*

**விளக்கம்:** கோசல நாட்டில் வறுமை இல்லை. எனவே கொடைக்கு இடமில்லை. நேருக்கு நேர் நின்று போர்புரிபவர் இல்லை. எனவே உடல்வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை. பொய் பேசுதல் இல்லை. எனவே உண்மையின் சிறப்புத் தெரிவதில்லை. கேள்விச்செல்வம் மிகுந்து இருப்பதால் அறியாமை சிறிதும் இல்லை. ஒன்றின் இருப்பால் இன்னொன்றை அடையாளப்படுத்தி கோசல நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.

**இ) இராமனின் மாநிற மேனியை வருணித்தல்**

*வெய்யோனொளி தன்மேனியின்…………….. குடையான்.*

**விளக்கம்:** பகலவனின் ஒளி இராமனின் நீலமேனியில் பட்டுக் கதிரொளியே இல்லையென்றாகிவிட்டது. அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக்கடலோ? மழை தரும் கரு மேகமோ? என கூற முடியவில்லை என்று தன் இயலாமையை கம்பர் கவித்திறன் பொங்க எடுத்துரைக்கிறார்.

**ஈ) குகன் தன் வேதனையை வெளிப்படுத்துதல்**

*ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் …………………….யேசாரோ.*

**விளக்கம்:** ஆழமும், அலைகளையும் கொண்ட கங்கை ஆற்றைக் கடந்து இவர்கள் செல்வார்களா? யானைகளைக் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகுக் காட்டி ஓடுகின்ற வில் வீரனல்லன். 'என் நண்பன் நீ' என்ற இராமனின் சொல்லைக் காப்பாற்றுவது எனது கடமையல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் பழித்துரைக்கமாட்டார்களா? என குகன் உரைப்பதாய் அழகுற கூறுகிறார்.

**உ) கும்பகருணனை உறக்கத்திலிருந்து எழுப்புதல்**

*உறங்கு கின்ற கும்ப கன்ன ………*
*………. வாயி னிக்கி டந்து றங்குவாய்*

**விளக்கம்:** உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வெல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண எழுந்திருக்க வேண்டும். காற்றாடிபோல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக! என்பதாகக் கூறப்பட்டுள்ளது. உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசை நயத்தில், கும்பகருணனை எழுப்பும் காட்சி வெளிப்படுகிறது.

இவற்றின் மூலம் கம்பர் சந்தக்கவிதை உலகில் சிறகடித்துப் பறந்தவர் என்பதை மறுக்க முடியாது.



Way to success